20.03.2025 HMOP No. 175/2021

சாட்சி : PW 1 கணேஷ்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள் உள்ளன. முதல் குழந்தைக்கு 8 வயது, 2வது குழந்தைக்கு 6 வயதிருக்கும். எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 11 வருடம் ஆகிறது. என் குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். எனது மனுவிலும் நிருபணவாக்குமூலத்திலும் என் மனைவி 9 மாதங்கள் தான் என்னுடன் வாழ்ந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு சேர்ந்து வாழ்ந்த காலத்தில் வெளிநாட்டில் இருந்து ஒரு முறை கூட பணம் அனுப்பியது இல்லை என்று சொன்னால் நான் என் மனைவிக்கு அனுப்புவது இல்லை என் வங்கிக்கணக்கிற்கு அனுப்புவேன் அவர் என் ஏடிஎம் கார்டு மூலமாக பணத்தை எடுத்துக்கொள்வார்.

2. எதிர்மனுதாரர் என் ஏடிஎம் கார்டு மூலமாக பணம் எடுத்தார் என்று நான் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் திருமணம் ஆன நாளிலிருந்து எனது மனைவிக்கும் எனது குழந்தைக்கும் எந்த பணமும் கொடுத்தது இல்லை என்பதால் தான் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவர் இங்கு இருக்கும் போது மட்டும் தான் பணம் ஏடிஎம்மில் எடுத்தார் அந்தமானில் இருக்கும் போது அவருடைய அப்பாவின் செலவில் பார்த்துக்கொண்டார்.

3. நான் வெளிநாட்டில் இருக்கும் போது எனது தாயாருக்கு நேரடியாக பணம் அனுப்புவது வழக்கம் என்றால் இல்லை எனது வங்கிக்கணக்கு மூலமாக அனுப்புவேன். அவரும் ஏடிஎம் கார்டு மூலமாக பணம் எடுத்துக்கொள்வாரா என்றால் இல்லை அவர் என்னுடன் இணைப்பு கணக்கு வைத்திருந்ததால் அவர் வங்கியிலேயே பணம் எடுத்துக்கொள்வார். எனது மனைவிக்கு அடிக்கடி பேருந்தில் சென்றதால் கர்பம் கலைந்துவிட்டதாக நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம்

தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, அவ்வாறு கர்பம் எதுவும் கலையவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி எனது அப்பா, அம்மாவிடம்  அடிக்கடி சண்டை பிடிப்பதாக எனது நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை , பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் அவ்வாறு எந்த காலத்திலிலும் சண்டை போடவில்லை என்றும் அவ்வாறு சண்டை போட்டு இருந்தால் சமரச பேச்சு வார்த்தையோ அல்லது புகாரோ கொடுத்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

4. அதை போல எனது மனைவிக்கு அந்தமானிலிருந்து முகநூலில் குறுஞ்செய்தி வந்ததை நான் பார்த்தேன் என்று நான் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது மனைவிக்கு எந்தவித குறுஞ்செய்தி வரவில்லை என்றும், அதனால் தான் நான் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி பூச்சி மருந்து சாப்பிட்டது போன்று நடித்தார் என்றும் நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை மேற்கொண்டோம் என்று சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு பூச்சி மருந்து எதுவும் சாப்பிடவில்லை என்றும் நான் வழ்கிற்க்காக அவர் சாப்பிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. அதைபோல எனது மனைவி 10 பவுன் நகையை என் மனைவி எடுத்துச்சென்றதற்கு ஆதரவாக நகை ரசீது எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைவி எந்த  நகையும் எடுத்து செல்லவில்லை என்றாலும் சீதன சொத்துக்கள் அனைத்தும் என் வசமே உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. அவர் அள்ளிச்சென்று விட்டார். நான் மரச்சாமான்கள் பண்ட பாத்திரங்கள் எல்லாம் அவரது அப்பத்தா வீட்டில் கொடுத்துவிட்டதாக வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிய்ல்ல. தற்போது எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 6 முதல் 7 வருடங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். இந்த 7 வருடங்களில் என் குழந்தைகளுக்கு பிஸ்கட்டோ பால் டப்பாவோ எதுவும் என்னால்

வாங்கி கொடுக்கவில்லை என்றால் அவர்கள் என்னை பார்க்கவிடுவதில்லை. நான் சேர்ந்து வாழ்ந்த காலத்திலும் பிரிந்து வாழ்ந்த காலத்திலும் நான் எனது குழந்தைகளை தூக்கியதே கிடையாது என்றால் சரியல்ல, என் இரண்டாவது மகன் பிறந்து 1 மாதம் தான் என்மனைவி என்னுடன் இருந்தார், அதன் பின்பு அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார்.

6. என் மகன் பிறந்து 1 மாதத்தில் என் மனைவி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாக நான் தாக்கல் செய்துள்ள மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் என் குழந்தைகளை பார்க்க வேண்டும் என்றோ அவர்களை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றோ இந்த நீதிமன்றத்திலோ வேறு எந்த நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விவாகரத்து கோரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிர் மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதில் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளது என்று சொல்லியிருந்தார் என்றால் சரிதான்.

7.நான் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் எதிர் மனுதாரருடன் இரண்டு மாதத்திற்கு முன்பு சேர்ந்து வாழ பஞ்சாயத்து மேற்கொண்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு திருமணம் செய்ய உள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அப்படி எதுவும் இல்லை. அந்த பெண்ணின் போட்டாவுடன் அடிக்கடி நான் வாட்ஸ் அப் ஸ்டேடஸ் வைப்பதை வழக்கமாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் எதிர்மனுதாரர் ஆகிய என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ இன்றைய தேதிவரை தயாராக உள்ளார் என்று சொன்னால் சேர்ந்து வாழ நான் முன்னரே அழைத்தேன் அவர்தான் வரவில்லை.

8.நான் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளதால்தான் சேர்ந்து வாழ வழக்கு தாக்கல் செய்யாமல் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கானது எவ்வித மூல ஆதாரமின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.